Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பரத நாட்டியத்தில் நவீன உருப்படிகள்

S.நர்மதா
இசைத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

29

**ஆய்வுச்சுருக்கம்:-**

காலந்தோறும் நாட்டிய உருப்படிகள் மாற்றம் கண்டுக்கொண்டே வருகின்றன. சங்க காலத்தில் கூத்துக்களாக இருந்தது. சங்கம் மருவிய காலத்திலும் அது தொடரப்பட்டது. சிலப்பதிகாரத்திலும் 11 வகை ஆடல்கள் மிக சிறப்பிடம் வகித்தன. கூத்துக்களாக இருந்த நாட்டியம் சோழர் ஆட்சிக்கு பின் நாயக்க மன்னர் ஆட்சி காலத்தில் மிகப் பெரிய மாற்றம் கண்டது அந்த மாற்றம் என்னவென்றால், கூத்துக்களாக இருந்த நாட்டியம் "நிரூபணம்" என்ற அமைப்பில் 18 முதல் 22 உருப்படிகளாக கொண்ட அமைப்பில் உருவாக்கப்பட்டது.

நாயக்கர் ஆட்சிக்கு பின் மராட்டியர் ஆட்சிக்காலம் வந்தது. நிரூபணம் "மார்க்கம்" என்ற அமைப்பிற்கு தஞ்சை நால்வர்களால் மாற்றம் கொண்டு வரப்பட்டது. அந்த மார்க்கம் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், சில, கல்வியாளர்கள் உள்ளே வரும்பொழுது உபமார்க்கம் என்னும் நாட்டிய உருப்படிகளும் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த உபமார்க்கம் இருந்தபோதும் தற்காலத்தில் நவீன காலத்திற்கு ஏற்றப்படி புது புது எண்ணங்கள் தோன்ற நாட்டியத்திலும் புது புது எண்ணங்கள் உருவானது. உதாரணத்திற்கு, பெண் விடுதலை, பாலியல் வன் கொடுமை, தீண்டாமை பெண் கல்வி, குழந்தை தொழிலாளர்கள், விவசாயிகள், பாப்மியூச் பாடலிற்கு நடனம், சினிமா பாடலிற்கு நடனம் பல விதமான நவீன உருப்படிகள் மற்றும் கருத்துக்கள் நாட்டிய உலகில் ஆடப்பட்டது. அதைப்பற்றி ஆய்வு செய்து இந்தக் கட்டுரையில் வெளியிடப்படுகிறது.

**தலைப்பின் அறிமுகம்:-**

தற்போது மார்க்கத்தில் உள்ள உருப்படிகள் மாற்றம் கண்டு உபமார்க்கமாக அமைக்கப்பட்டுள்ளன. தற்போது புது புது நடன ஆசிரியர்கள் தோன்றி வருகிறார்கள். அவர்கள் தற்போது மார்க்கத்தைவிட உபமார்க்கத்தையே கையாளுகின்றார்கள். முன் காலத்தில் நடன ஆசிரியர் தன் மாணவிக்கு மார்க்கம் கற்றுத் தந்து அரங்கேற்றத்தில் மாணவிகளை அந்த உருப்படிகளை ஆட வைப்பார்கள். ஆனால் தற்போது மார்க்கத்தை தாண்டி உபமார்க்கம் அதில் வரும் உருப்படிகளைக் கற்றுத் தந்து அரங்கேற்றத்தில் மாணவிகளை ஆட வைக்கிறார்கள். (எ.கா) பாம்பு நடனம், மயில் நடனம், காவடிச்சிந்து, அஷ்டபதி, அஷ்டகம், பஜன், க்ருதி, போன்றவைகள்.

உபமார்க்கத்தை தாண்டி தற்போது பரத நாட்டியத்தில் நவீன உருப்படிகள் நிறைய மாற்றம் கண்டுக் கொண்டே வருகிறது. திரைப்பட பாடல்களுக்கு நடனம் ஆடி வருகிறார்கள். வெஸ்ட்டன் (Western) பாடலிற்கு பரத நாட்டியம் ஆடுகிறார்கள். இசைக் கருவிகளை (Instrumental Music) வைத்து மட்டும் நடனம் ஆடுகிறார்கள். பாப் மியூசிக் (Pop Music) போன்ற பாடலிற்கும் நடனம் ஆடுகிறார்கள். ஒரு கதையை எடுத்துக் கொண்டு தீமாடிக் (Thematic) நடனம் ஆடுகிறார்கள் (எ.கா)

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

சுனாமியைப் பற்றி, பாலியல் வன்கொடுமை பற்றி, தீண்டாமை, பெண் விடுதலை, முதியோர் காப்பகம் பற்றி, குழந்தை தொழிலாளர்கள் பற்றி, விவசாயிகளைப் பற்றி, நேச்சர் (Nature) பற்றி, மரம் வெட்டக்கூடாது என்பதைப் பற்றி இதுபோன்று நம் நடைமுறையில் நடக்கின்ற விஷயங்களைப் பற்றி பரத நாட்டியத்தில் நவீன உருப்படிகளாக மாற்றாம் கண்டுக்கோண்டே இருப்பதை காணலாம்.

**முன்னுரை:**

பண்டையகால மனிதர்கள் எந்தவித கட்டுப்பாடுமின்றி ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தனர். அதன் பின் மனித நாகரீகம் வளர, வளர கலைகளும் மாற்றம் கண்டது. பண்டைய மனிதன் ஆடிய ஆடல், கிராமிய கலைகளாக காலப்போக்கில் மாற்றம் கண்டது, இந்த செவ்விய கலைகளின் ஆடல் உருப்படிகள் காலந்தோறும் மாற்றம் கண்டுக்கொண்டே வருகின்றது. முதலில் கூத்துக்கள் என்று அழைக்கப்பட்டது. பின் கலம்பகம் என்ற அமைப்பிற்கு மாற்றம் கண்டது.

அதன் பின், நாயக்க மன்னர் காலத்தில் நிரூபணம் என்ற அமைப்பிற்கு மாற்றம் கண்டது. பிறகு, மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சை நால்வர்களால் மார்க்கம் என்ற அமைப்பிற்கு மாற்றம் கண்டது. தற்காலதில் மார்க்கம் என்பது உபமார்க்கமாக மாற்றம் கண்டு இப்போது நவீன உருப்படிகள் பல நாட்டிய நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்போது, ஒரு நடன நிகழ்வின் நிகழ்ச்சிநிரலில் காலம்தோறும் மாற்றங்களைச் சந்தித்து வந்துக்கொண்டிருக்கிறது. இந்த மாற்றங்கள், அதன் வெளி வடிவத்தில் மட்டுமல்லாது உள்ளீடான பொருளிலும் ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். வேதியல், பொதுவியல் என்னும் இரு வகைகளைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. இலக்கண நூல்கள் மார்கி மற்றும் தேசி என்னும் வகைகளை காட்டுகின்றது.

இதுவரை, காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள் பலவற்றுள் “நிரூபணம்” மற்றும் “சதிர்” மிக முக்கியம் என்று கருதப்படுகின்றது. இவை மராட்டியர் காலத்தில் உருவாயின. இன்று வழங்கப்படும் மார்க்கம் என்னும் நிகழ்ச்சி வடிவம், சதிர் வடிவத்திலிருந்து பிறந்ததாகும். சதிர் வடிவத்தின் முன்னோடி நிரூபணம் ஆகும். நிரூபணம் 18 உருவப்படிகளையும், சதிர் 8 உருப்படிகலையும் வைத்து அமைக்கப்பட்டுள்ளது.

1.1 **நிரூபணம் மற்றும் அதன் உருப்படிகள்:**

நிரூபணம் என்ற சொல்லிற்கு அர்த்தம் “நிரூபித்தல்” அல்லது “விரிவுபடுத்துதல்” ஆகும். இந்த வடிவத்தை சஹாஜி மன்னர் 18 வகையான உருப்படிகளைக் கொண்டு அதன் இலக்கணம் மாறாமல் தொகுத்து வழங்கியுள்ளார். இந்த வடிவத்தின் முக்கிய சிறப்பு. இது “ஏக ராகம்” மற்றும் “ஏக தாளத்தில்” அமைக்கப்பட்டிருக்கும்.

மராட்டியர் மன்னர்கள் காலத்தில் “கதாகாலக்ஷேபகார்கள்” இசைக்கும் இசை வடிவத்திற்கும் ‘நிரூபணம்’ என்று பெயர். இது சங்கீத உபந்யாசம் என்பதை குறிப்பிடுகின்றது. இது ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் ஒரு இசை வடிவத்திற்கும் இப்பெயர் உண்டு. நிரூபணம் இரண்டு வகையாகும்.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

1. பாடலும் உரைநடையும் இணைந்த அமைப்பு.
2. உரைநடை அல்லது ஸ்லோகங்களும், பாடல்களும் இணைந்த அமைப்பு.

இதனை 'நாட்யப்ரபந்தம்' என்று அழைப்பர். ஸஹாஜிமன்னர், 15 நிரூபணங்களைத் தானே அமைத்து "கோர்வயாஞ்சே சாஹித்யசே ஜின்னாஹ்" என்னும் நூலை இயற்றியுள்ளார். இவை யாவுமே 'ஜய ஜய' என்னும் தொடக்க உருப்படிகளுடன் துவங்கி இறுதியாக "மங்களம்" என்னும் உருப்படிகளுடன் முடியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

**நிரூபணத்தில் அமையும் உருப்படிகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜய ஜய | 10. | தில்லானா |
| 2. | ஸரனு | 11. | அர்ஜித பத |
| 3. | அலரு | 12. | ஜக்கிணி |
| 4. | சொல்லு | 13. | கீதம் |
| 5. | சப்த | 14. | ப்ரபந்தம் |
| 6. | வர்ணம் | 15. | த்ரிபுட |
| 7. | பதம் | 16. | ஸ்லோக வர்ண |
| 8. | ஸ்வரஜதி | 17. | கௌத்த |
| 9. | அபிநய பத | 18. | மங்களம். |

**துவக்கத்தில் நிகழ்த்தப்படும் உருப்படிகள்:-**

1. புஷ்பாஞ்சலி
2. தோடய மங்களம்
3. மல்லாரி
4. அலாரிப்பு

**அடுத்து வரும் உருப்படிகள்:-**

1. ஜதீஸ்வரம்
2. கவுத்துவம்
3. சப்தம்

**மைய உருப்படிகள்:-**

1. வர்ணம்
2. ஸ்வர ஜதி
3. கீர்த்தனம்
4. க்ருதி
5. பதம்
6. ஜாவளி

**நிகழ்ச்சியின் இறுதியில் அமையும் உருப்படிகள்:**

1. தில்லானா
2. மங்களம்

2. **'மார்க்கம் "மற்றும் அதன் உருப்படிகள்:**

தஞ்சை நால்வர்களால் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி வடிவம் "மார்க்கம்" என்று அழைக்கப்பட்டது. இது நிரூபணம் வடிவத்தினை ஒட்டி அமைந்துள்ளது. பாரம்பரிய நட்டுவனார்களும், அவர்களுக்கு அமைந்த சிறந்த மாணவிகளான நடன மணிகளாலும் முறையாகப் பழக்கப்பட்டு இன்றைய தலைமுறை வரை இந்த வடிவம் நிலை பெற்றுள்ளது.

**மார்க்கத்தில் அமையும் உருப்படிகள்:**

1. அலாரிப்பு
2. ஜதீஸ்வரம்
3. சப்தம்
4. வர்ணம்
5. பதம்
6. ஜாவளி
7. தில்லானா
8. ஸ்லோகம்.

1.3 **காலப்போக்கில் இணைக்கப்பட்ட உபமார்க்க உருப்படிகள்:-**

மார்க்கத்தில் சேராத உருப்படிகள் உபமார்க்கமாகும். தஞ்சை நால்வர் வகுத்தளித்த மார்கத்தின் உருப்படிகள் தவிர, அதன் பிறகு, வந்த உருப்படிகள் சிலவற்றை இன்றைய நடன மேடைகளில் காண முடிகிறது. உதாரணமாக.

| | |
|---|---|
| 1. மயில் நடனம் | 5. அஷ்டபதி |
| 2. பாம்பு நடனம் | 6. அஷ்டகம் |
| 3. குறித்தி நடனம் | 7. பஜன் |
| 4. காவிச்சிந்து | 8. அபங்கம் |

திருப்பாவையிலிருந்து பாடல்கள் எடுத்து 'ஆண்டாள்' நடனமும் நிகழ்த்தப்படுவதை காண்கிறோம். தமிழ் பாடல்கள் தற்போது நடன உருப்படிகளில் சேர்த்து ஆடி வருகிறார்கள். பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், போன்ற நிறைய பாடலை நடன உருப்படிகளில் கொண்டு வந்துள்ளார்கள். அது தற்போது உபமார்க்கமாக அமைந்து வருகிறது.

1.4 **தற்போதுள்ள நவீன உருப்படிகள்-**

தற்போது நிறைய திரைப்பட பாடலிற்கு நடனம் ஆடிவருகிறார்கள்.

**உதாரணமாக:**

1. ஓம் நமசிவாய
2. சிவ சிவ சங்கர

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

3. வராஹ ரூபம்
4. உன்னை காணாத
5. ஜகதீஸ்வர தேவி
6. கண்ணும் கண்ணும் கலந்து
7. மார்கழித் திங்கள்
8. மன்னவன் வந்தானடி
9. மாதவி பொன்மயிலால்
10. நலம்தானா போன்ற திரைப்பட பாடலிற்கு பரத நாட்டியத்தில் நடனம் ஆடி வருகிறார்கள்.

**வெஸ்டன் பாடலிற்கு நடனம்:**

தற்போதுள்ள காலக்கட்டத்தில் நவீனமாக வளர்ந்து வருவதால் நடன ஆசிரியர்கள் சிலர் நவீன முறையில் சிந்தித்து வெஸ்டன் பாடலிற்குக் கூட நடனம் ஆடுகிறார்கள்.

1. ஷேப் ஆப் யூ (Shape of you)
2. ஜதி மிக்ஸ் (Jathi mix)

ஜதிகளை வெஸ்டன் முறையில் பாடலும், பரத நாட்டிய தாளத்திற்கு நடனம் ஆடி வருகிறார்கள்.

பாப் மியூசிக் (Pop Music) போன்ற பாடலிற்கும் நவீன முறையில் கையாளப்பட்டு பரத நாட்டியத்தில் நடனம் ஆடுகிறார்கள்.

**திமாடிக் நடனம் (Thematic Dance):-**

திருமதி. காயத்ரி என்பவர் தன் குழுவோடு சுனாமியைப் பற்றி அதன் பின் நடந்த அழிவினைப் பற்றி பரத நாட்டியத்தில் தூர்தர்ஷன் சேனலில் (Doordharshan Channel) ஆடியுள்ளார்.

புறநானூறு என்று அதனைப்பற்றி Dr.லக்ஷ்மிராமசாமி என்பவர் புறநானூறு ஒரு சங்க இலக்கியம் மற்றும் தமிழகத்தின் பெருமை. இது முன்னோர்களின் வாழ்க்கை, அவர்களின் மகத்துவம், போர் தந்திரங்கள், அரசாட்சி மற்றும் மதிப்புகள் ஆகியவாற்றைக் கையாளுகிறது. சங்கத்தமிழின் அகம் மற்றும் புறம் ஆகிய இரண்டும் பொருத்தமான மற்றும் பிரபலமான கதைகளுடன் நடனம் ஆடியுள்ளனர்.

(https://youtu.be/BnHtLXbFS30)

பெண்களுக்கு அதிகாரம் கொடுத்தல் (Women Empowerment) பெண்கள் வன்கொடுமை, பாலியல் கொடுமைகள் பற்றி VIT University நடனம் ஆடியுள்ளனர்

(https://youtu.be/NOEEABPmbSU).

இருட்டிலிருந்து வெளிச்சம் என்று பெண் சுதந்திரத்தை பற்றி, பெண் கல்வியைப் பற்றி பாட்னாவில் பெண்கள் கல்லூரியில் நடனம் ஆடியுள்ளனர்.

(https://youtube.com/watch? V=K99xZ3wlgwm &
feature=Share.)

ஜான்சி ராணியின் வரலாறுப் பற்றி ஆடியுள்லனர். (https://youtube.com/watch? V=Nef60alu5LK & feature=share).

இயற்கையின் ஐந்து கூறுகளைப் பற்றி ஆடி உள்ளனர். https://youtube/DSklJTtroc/DEREATCOVID-19 கொரோனாவை தோற்கடிக்க என்ற தீமாடிக் நடனம் பரத நாட்டியத்தில் ருத்ரா என்ற குழு நடனம் ஆடியுள்ளனர்.

(https://youtu.be/iGetjcVvJYw)

க்ருதி டான்ஸ் அகாடமி (Kruti Dance Academy) யோகா நாட்டியம் என்று பரத நாட்டியத்தில் உள்ள 108 கரணங்களில் சில கரணங்கள் நின்று காட்டி ஆடியுள்ளனர்.

(https://youtu.be/wBj3KGVAhj4)

பரமேக்காவு வித்யா மந்திர் என்னும் பள்ளியில் மழையைப் பற்றி நடனம் ஆடியுள்ளனர்.

(https://youtu.be/6-sMR_oHvzM)

இதுமட்டுமல்லாமல் தீண்டாமைப்பற்றி, குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி, விவசாயிகளைப் பற்றி இதுப்போன்ற நடைமுறையில் நடக்கின்ற விஷயத்தை பரத நாட்டியத்தில் தீமாடிக் நடனம் மூலமாக நவீன உருப்படிகளாக மக்களுக்கு தெரிவிப்பதை நாம் காண முடிகிறது.

**முடிவுரை:-**

நாட்டிய உருப்படிகள் அனைத்தும் இருந்தாலும், காலந்தோறும் மாற்றம் கண்டுக் கொண்டேதான் வருகின்றது. இந்த மாற்றம் என்னவென்றால் சிலப்பதிகாரத்திலிருந்து, சோழர் காலத்தில், நாயக்க மன்னர் காலத்தில், பின் மராட்டியர் ஆட்சிக் காலத்தில் அதன்பின் மார்க்கம் உபமார்க்கமாக மாற்றம் கண்டு வந்துள்ளது. நவீன காலங்களில் உபமார்க்கம் மாறி நாட்டியங்கள் நவீன உருப்படிகள் தற்போது மேடையில், நிகழ்ச்சிகளில் கையாளப்பட்டு வருகிறது. நவீன உருப்படிகள் என்னென்ன இருக்கின்றது என்று ஆய்வு செய்து பதிவு செய்துள்ளேன்.

**துணை நூற்ப்பட்டியல்:**

1. பழந்தமிழ்க் கூத்தே பரத நாட்டியம் (பாண்டியன் பாசறை, சென்னை).
2. மராட்டியர் வளர்த்த நுண்கலைகள்: (சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்).
3. நாயக்க மன்னர் ஆடற்கலை: (இசைத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்).
4. பரத இசையும் தஞ்சை நால்வரும் (இசைத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்).
5. பரத இசை மரபு (கிருஷ்ணி பதிப்பகம், தஞ்சாவூர்)
6. முதுகலை நாட்டியம் நாட்டியத்தின் வரலாறு (சென்னைப் பல்கலைக்கழகம்)
7. யூடியூப் (Youtube)

*****************